No. of Printed Pages : 6

800495 **6310**

பதிவு எண்
Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# Part III — Vocational Subjects

(Agricultural Area)

# வேளாண் செயல்முறைகள்
# AGRICULTURAL PRACTICES

( தமிழ் வழி / Tamil Versions )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**I.** **(A)** **சரியான** விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : **15x1=15**

**1.** நெற்பயிரின் தாயகம் _________ .

(அ) சீனா (ஆ) தாய்லாந்து

(இ) பிலிப்பைன்ஸ் (ஈ) இந்தியா

**2.** சோளப் பயிருக்கான இடைவெளி _________ செ.மீ

(அ) $30 \times 15$ (ஆ) $45 \times 15$

(இ) $30 \times 10$ (ஈ) $60 \times 30$

**3.** வரப்புப் பயிருக்கு உகந்த துவரை ரகம் _________ .

(அ) COPH2 (ஆ) CO(RG)7

(இ) VBN(RG)3 (ஈ) BSR1

[ திருப்புக / Turn over

4. கற்பக விருட்சம் என்று அழைக்கப்படும் மரம் __________ .

(அ) பனை
(ஆ) தென்னை
(இ) வாழை
(ஈ) எண்ணெய்பனை

5. பருத்தி விதைகளின் மேலுள்ள பஞ்சை நீக்க __________ என்ற இரசாயனம் பயன்படுத்தப்படுகிறது.

(அ) கந்தக அமிலம்
(ஆ) நைட்ரிக் அமிலம்
(இ) ஹைட்ரோகுளோரிக் அமிலம்
(ஈ) பென்சாயிக் அமிலம்

6. பூசணி குடும்ப பயிர்களில் பெண் பூக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க __________ பயன்படுத்த வேண்டும்.

(அ) IBA
(ஆ) சாலிசிலிக் அமிலம்
(இ) எத்திரல்
(ஈ) சைக்கோசெல்

7. பாக்கின் சுவை __________.

(அ) இனிப்பு
(ஆ) கசப்பு
(இ) துவர்ப்பு
(ஈ) புளிப்பு

8. வறட்சியான பகுதிகளில் வளரும் ஒரு மூலிகைத் தாவரம் __________.

(அ) சப்பாத்திக்கள்ளி
(ஆ) சோற்றுக்கற்றாழை
(இ) பார்த்தீனியம்
(ஈ) கூர்க்கன்கிழங்கு

9. நுனிக்கிள்ளுதல் எந்த மலர்ப் பயிரில் மேற்கொள்ளப்படுகிறது.

(அ) செண்டுமல்லி
(ஆ) முல்லை
(இ) மல்லிகை
(ஈ) ரோஜா

10. காளான் வளர்ப்பிற்காக பயன்படும் மூலப்பொருள் __________ .

(அ) தவிடு
(ஆ) வைக்கோல்
(இ) நார்
(ஈ) பிண்ணாக்கு

11. வல்லுநர் விதையின் சந்ததி _________ .

(அ) சான்றிதழ் விதை (ஆ) கருவிதை

(இ) ஆதாரவிதை (ஈ) வல்லுநர் விதை

12. பழங்களை பழுக்க வைக்க உதவும் ஊக்கி _________ .

(அ) IAA (ஆ) NAA

(இ) ABA (ஈ) எத்திலின்

13. தாவர வளைவுகள் அமைக்கும் இடம் _________ .

(அ) மையம் (ஆ) நுழைவாயில்கள்

(இ) வெளியேறும் பகுதி (ஈ) ஓரப்பகுதி

14. _________ நாட்கள் வயதுடைய மல்பெரி குச்சிகள் நடவுக்கு ஏற்றது.

(அ) 30 (ஆ) 50

(இ) 45 (ஈ) 120

15. கோழிகளில் ஏற்படும் நோய் _________ .

(அ) ராணிக்கெட் (ஆ) பால்காய்ச்சல்

(இ) அடைப்பான் (ஈ) அப்ளோநச்சு

(B) பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **ஓரிரு** வார்த்தைகளில் விடையளிக்கவும். **15x1=15**

16. நிலக்கடலை சாகுபடியில் வறட்சியை தாங்குவதற்கு தெளிக்கப்படும் இரசாயனம் எது?

17. பருத்தி விதை நேர்த்திக்கு பயன்படும் பூச்சிக்கொல்லி மருந்து யாது?

18. கரும்பு பயிரின் தாவரவியல் பெயர் என்ன?

19. உருளைக்கிழங்கு சேமிப்பு காலத்தை அதிகரிக்க செய்யும் நுட்பத்தை எழுதுக?

[ திருப்புக / Turn over

20. வாழையில் கிழங்கு நேர்த்தி செய்ய பயன்படும் மருந்துகள் யாவை?

21. மஞ்சள் பயிருக்கான களைக்கொல்லியை எழுதுக?

22. கலப்பைக்கிழங்கு என்று அழைக்கப்படுவது எது?

23. நெல் கொள்ளை நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்ட ரகம் ________ .

24. ஒருங்கிணைந்த பண்ணையத்தின் அடிப்படைத் தத்துவத்தினை எழுதுக.

25. பயிர்ப்பெருக்கம் செய்ய வேண்டிய பயிரின் இளஞ்செடி ________ என அழைக்கிறோம்.

26. இனக்கலப்பை தவிர்ப்பதற்காக பராமரிக்கப்படும் இடைவெளிக்கு ________ எனப்படும்.

27. துல்லிய பண்ணைத் திட்டத்தில் நாற்றுகள் உற்பத்தி செய்யும் முறைகளில் ஒன்றினைக் குறிப்பிடுக.

28. களர் உவர் நிலத்திற்கு ஏற்ற மல்பெரி இரகங்களில் ஒன்று ________ .

29. ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்பது ________ .

30. கால்நடைகளுக்கு ஏற்படும் பாக்டீரியா நோய் ________ .

## பகுதி - II

II. **ஏதேனும் பத்து** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **நான்கு** வரிகளில் விடையளிக்கவும். **10x4=40**

31. மானாவாரி மக்காச்சோள சாகுபடியில் உர நிர்வாகம் பற்றி எழுதுக?

32. பயறு வகைப் பயிர்களுக்கான விதை நேர்த்தியினை எழுதுக?

33. பருத்தியில் நுனி கிள்ளுதல் பற்றி குறிப்பெழுதுக.

34. பழப்பயிர்கள் நான்கினை எழுதி அதன் தாவரவியல் பெயர்களை எழுது.

35. அவுரி (சென்னா) பதப்படுத்துதல் பற்றி குறிப்பு வரைக.

36. நச்சுக் கவர்ச்சி உணவு என்றால் என்ன? எவ்வாறு தயாரிக்கலாம்?

37. ஒருங்கிணைந்த முறையில் மீன் வளர்ப்பினை எவ்வாறு செய்யலாம்?

38. பயிர்ப்பெருக்கம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

39. சந்தை தொழில்நுட்பம் என்றால் என்ன?

40. மண்புழு உழவனின் நண்பன் என ஏன் அழைக்கப்படுகின்றது?

41. கலப்பட தடைச்சட்டம் பற்றி எழுது.

42. கோழிகளைத் தாக்கும் நோய்கள் யாவை?

## பகுதி - III

III. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்கவும். **5x10=50**

43. நெல் சாகுபடியில் நடவு வயல் தயார் செய்தல் பற்றி எழுதுக.

44. பயறு வகைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழி முறைகள் யாவை?

45. வெண்டைப் பயிருக்கான சாகுபடி முறைகளைக் குறிப்பிடுக.

46. மஞ்சள் பயிருக்கான சாகுபடி குறிப்பு எழுதுக.

47. சாமந்தி சாகுபடி முறைகளை எழுதுக.

48. நன்செய் நிலத்தில் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் பற்றி விவரி.

49. கால்நடைகளைத் தாக்கும் ஏதாவது ஐந்து நோய்கள் பற்றி எழுதுக.

[ திருப்புக / Turn over

## பகுதி - IV

**IV.** **எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **இரண்டு** பக்க அளவில் விடையளிக்கவும். **4x20=80**

**50.** நிலக்கடலைப் பயிருக்கான சாகுபடி முறைகளை எழுதுக.

**51.** கரும்பு பயிருக்கான சாகுபடி முறைகள் பற்றி எழுதுக.

**52.** புகையிலை சாகுபடி குறிப்புகள் தருக.

**53.** பருத்தி ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பற்றி விவரிக்கவும்.

**54.** நெல் ரக விதை உற்பத்தியினை எழுதுக.

**55.** குறிப்பெழுது - ராணித்தேனீ, ஆண் தேனீ, வேலையாள் தேனீ.

**- o O o -**